TAMIL NADU LEGISLATIV
25 APR 198
MADRAS-600

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1979 அக்டோபர் 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவில்பட்டி, சங்கரன்கோவில் தாலுக்காக்களில் மின இணைப்புகள்.

*வினா எண் 21—திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி, சங்கரன் கோவில் தாலுக்காக்களில் புதிய மின் இணைப்புக் கொடுக்கக் கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், நிலத்தடி நீரில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் தடையை நீக்கி இன்றுள்ள அத்துணை கிணறுகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இது ரொம்ப நாளைக்கு முன்னால் போடப்பட்ட கேள்வி. அந்த மாதிரி ஒரு நிலைமை இப்பொழுது வரவில்லை. இனிமேல் வெட்டு இல்லாமல் தொடர்ச்சியாக விவசாயிகளுக்கும், விவசாயத் திற்கும் மின்சாரம் கிடைப்பதற்கு திடீர் திடீரென்று நின்று விடாமல் விவசாயத்தைப் பாதிக்காமல் தொடர்ச்சியாக, கட் இல்லாமல் கரன்ட் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தனிக் கேள்வி போடவும்.

[1979 அக்டோபர் 29

சீமான் நகருக்கு மின்சக்தி வழங்கல்.

*வினா எண் 22—திரு. சீ. செல்வராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதியிலுள்ள ''சீமான் நகரில்'' மின் கம்பம் நாட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், ''ஒயர்'' இழுக்கப்படாமல் மின் இணைப்பும் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆமெனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மின் கம்பங்கள் 1979ஆம் ஆண்டு சூன் திங்களில் நடப்பட்டன.

(ஆ) 9–7–1979 அன்று மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு விட்டன.

திரு. சீ. செல்வராஜ்; மாண்புமிகு தலைவரவர்களே ''சீமான் நகரில்,, மின் கம்பம் நாட்டப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொளகிறேன். இன்னும் அதிகமான மின் கம்பங்கள் தேவைப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் நடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; நன்றிக்கு நன்றி. நன்றி உரிய வகையில் கௌரவிக்கப்படும்.

அரூர் வட்டத்திலுள்ள பிர்க்காக்கள்.

*வினா எண் 23—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டத்திலுள்ள ஆறு ரெவின்யூ பிர்க்காக்களை ஒன்பது பிர்க்காக்களாக மாற்றியமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

மாநிலம் முழுவதும் உள்ள பிர்க்காக்களை நிர்வாக வசதிகளுக்கேற்பச் சிறியவைகளாகச் சீரமைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஹரூர் வட்டத்திலுள்ள 6 பிர்க்காக்கள் என்பது 9 பிர்க்காக்களாக அமைக்கப்பட்டிருக்கிறது.